# மட்டுநகரில் புலிகள் தாக்கி படையினர் பலர் பலி

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 13 ந: ஆகிர் பிறை: 10 இதழ்: 188
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 30-10-1990

## மேஜர் கண்ணன் வீரமரணம்

(மட்டுநகர்)

மட்டுநகரில் விடுதலைப்புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்துக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஜீப், ட்றக், பவல் வாகனங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. இத்தாக்குதலில் மேஜர் கண்ணன் உட்பட புலிகள் தரப்பில் மூவர் வீரமரணமடைந்தனர்.

செங்கலடி இராணுவமுகாமிருந்து இராணுவத்தினர் பவல், ஜீப் வண்டிகள் சகிதமும், கால்நடையாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் இழப்புகளுடன் பின்வாங்கினார்கள்

(திருமலை)

திருக்கணமடு. கல்லாறு, ஆனைஒடுவ ஆகிய மூன்று இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றை சுற்றிவளைக்க முற்பட்டபோது 'வெருக்கல்' என்னுமிடத்தில் அரை மைலுக்கு முன் வைத்து விடுதலைப்புலிகள் தாக்கி இராணுவத்திரை பின்வாங்கச் செய்தனர்.

இம்மோதலில் இராணுவத்தின் ஒரு பகுதியினர் பின்புறமாக தாக்க முற்பட்டபோது புலிகளின் மிதிவெடியில் சிக்கியதால் பெரும் இழப்புகளுடன் முகாமுக்குள் சென்றனர். (வி)

இனப்பிரச்னைக்கு முகம்கொடுக்க முடியாது

# மாலைதீவு 'சாக்' மகாநாட்டை ஜனாதிபதி பிரேமா புறக்கணிப்பு

(கொழும்பு)

மாலைதீவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கலந்துகொள்ளமாட்டாரென மாலைதீவு அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கையில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சனை பற்றி கடுமையாக விவாதிக்கப்படலாம் என்ற காரணத்தினாலேயே ஜனாதிபதி பிரேமதாசா இதில் கலந்து கொள்வதை தவிர்த்துள்ளாரென தெரிவிக்கப்படுகிறது. (4-ம் பக்கம் பார்க்க)

## இழந்த கற்பித்த நாட்களை ஈடுசெய்யும் நோக்குடன் கைநூல்கள் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் இழந்த கற்பித்தல் நாட்களை ஈடுசெய்யும் நோக்குடன் பாடவிதானத்தை மீள் ஒழுங்குகள் செய்து கைநூல்களாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

பாடசாலைக்கு வரமுடியாமல் இருக்கும் மாணவர்களுக்கு (4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு செல்லும் நோயாளர்

## உணவு, குடிநீர் கொண்டு வருமாறு வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்கள், நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு முன்பதாக ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக்கு அல்லது மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நோயாளர்கள் செல்லும் கப்பல் பருத்தித்துறையிலிருந்து வியாழக்கிழமை காலை புறப்படவுள்ளது.

[4-ம் பக்கம் பார்க்க]

## ஈழ அகதிகளுக்கு உதவ நாலரைக் கோடி ரூபா பெறுவதற்கு முயற்சி

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்கு உதவும் பொருட்டு மத்திய அரசிடமிருந்து மேலும் நாலரைக் கோடி ரூபாவை பெறுவதற்கு தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

இராமர் கோவில் விவகாரம்

## இந்திய வட மாநிலங்களில் வன்செயல்கள் வெடிப்பு!

(புதுடில்லி)

அயோத்தி நகரில் இராமர் கோவில் அமைப்பது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து இந்திய வட மாநிலங்களில் படுகொலைகள்; தற்கொலைகள் குண்டுவெடிப்பு கண்ணீர் குண்டுவீச்சுசம்பவங்கள் உட்பட வன்செயல்கள் பல வெடித்துள்ளன.

உத்தரப்பிரதேசத்தில்நிகழ்ந்துள்ள ஆர்ப்பாட்டங்களையடுத்து சுமார் 1 லட்சத்துக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில்

## இராணுவம் பலி வீடுகள் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மாதிரிக்கிராமத்தை நோக்கி நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது, விடுத

4ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரி

## பிறப்பு பதிவுகளை நேரில் பெற ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த ஜூன் மாதம் 11-ம் திகதிக்குப்பின் பிறந்த குழந்தைகளின் 'பிறப்புப்பதிவு வேலைகள் யாவும் தற்சமயம் அரியாலையிலுள்ள 'சிவசக்தி வைத்திய நிலையம்' இல. 327, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் செயற்பட்டுவரு

(4-ம் பக்கம் பார்க்க)

## குமண செல்ல லங்காசிறி வருகிறது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமண கப்பல் நாளைமறுதினம் கொழும்பு திரும்பலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி மன்னருக்கிடையில் ஹெலிகள் போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிற்கும், மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிற்குமிடையில் நேற்று ஹெலிகளின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டது.

பலாலியில் இருந்து ஒரே தடவையில் 7ஹெலிகள் தென்திசையை நோக்கிப் பேரிரைச்சலுடன் சென்றன.

(2-ம் பக்கம் பார்க்க)

## ஜூன் 11-ற்கு பின்னர் ஏற்பட்ட சேத விபரங்களை திரட்டுமாறு யாழ். அரச அதிபர் பணிப்பு

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்களை உடனடியாகத் திரட்டி அனுப்புமாறு சகல உதவி அரசாங்க அதிபர்களையும் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பணித்துள்ளார்.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் கடந்த ஜூன் 11ம் திகதிக்குப் பின் நடைபெற்ற வன்செயல், தாக்குதல் காரணமாக உ. அ. அதிபர் பிரிவிலுள்ள தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, சேதம் போன்ற விபரங்களை உடனடியாக திரட்டி நவம்பர் 15ம் திகதிக்கு முன் அனுப்புமாறுகேட்கப்பட்டுள்ளது. (71)

மாவீரர் தினம்:

## ஒரு வார காலத்திற்கு மதுபான விற்பனைக்குத் தடை

(புங்குடுதீவு)

மாவீரர் தினத்தையொட்டி வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் தீவுப்பகுதி வட்டவை. சிற்றூரவைதலைவர் திரு, கார்த்திகேசு விசேட கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவீரர் தினவிழா நவம்பர் 11ம்தேதி ஆரம்பமாகவிருப்பதால் அந்த திகதியிலிருந்து ஒருவாரகாலத்திற்கு மதுபானம் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட வேண்டுமென்றும், இதனை மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராககடும்

(4-ம் பக்கம் பார்க்க)

# நயினாதீவு கடற்படையினர் பயணிகளிடம் பலத்த கெடுபிடி

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் நெடுந்தீவு, நயினாதிவு, பகுதிகளுக்கு பயணங்களை மேற்கொண்டு வரும் பிரயாணிகளை தீவிர சோதனைகளுக் குப்படுத்திவருகிறார்கள்.

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் நெடுந்தீவு என்று எழுதப்பட்டுள்ள அடையாள அட்டைகள் இருந்தால் தான் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவாராம், இல்லையேல் திருப்பி மீண்டும் குறிகாட்டுவானுக்கே அனுப்பிவிடுகிறார்கள்.

இளைஞர்களாக இருந்தால் பல கேள்விகளை எழுப்பி தாக்கிவிட்டு முகாம்கொண்டு செல்கின்றார்கள்.

நெடுந்தீவுக்கு தனது நண்பர் ஒருவரை காணசெல்வதென்றால் அது முடியாமல் இருக்கிறது.

அண்மையில் குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு சென்ற இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டார். நயினாதீவு என்று எழுதப்பட்ட அடையாள அட்டையுடன் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (101)

## குண்டுவீச்சு மத்தியிலும் திருடர்கள் கைவரிசை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற பொம்மர் விமானகுண்டுவீச்சு சம்பவத்தின்போது பண்டத்தரிப்பு சந்தையில் வியாபாரிகளினதும். விவசாயிகளினதும் விற்பனைப் பொருட்கள் பல திருட்டுப்போயுள்ளதாகபுகார் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு சந்திக்கு சமீபமாக திடீரென இரு விமானங்கள் குண்டுவீச்சை நடாத்தியபோது பண்டத்தரிப்பு சந்தையில் திரண்டு நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் அலறிக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினார்கள் அப்போது இப்பகுதி விவசாயிகள் விற்கக் கொண்டுவந்திருந்த வெங்காயம் மற்றும் மரக்கறிவகைகளையும் விட்டு விட்டு ஓடினார்கள்.

அத்தருணம் பார்த்து திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டியுள்ளனர். விவசாயிகளும் மற்றைய சிறு வியாபாரிகளும் சற்றுநேரத்தில் பதட்டம் தணிந்தபின்பு அங்கு திரும்பிவந்து பார்த்தபோது தங்கள் பொருட்களை காணாது திகைத்தனர்.

ஒரு விவசாயியின் 700 ரூபா பெறுமதியான வெங்காயமும் தேங்காய் விற்பனை செய்பவர்களின் தேங்காய்களும் இதில் அடங்கும் மற்றும் மரக்கறி வகைகளும் காணாமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (72)

## விரிவுரை ஆரம்பம்

(அராலி)

இலங்கை திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலைவத்தில் நவம்பர் மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன

## பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகளின் தொடர்ச்சியான நடமாட்டத்தினால், கௌதாரிமுனை என்னும் இடத்தில் ஹெலிகளிலிருந்து படையினர் இறக்கப்பட்டதாக யாழ். நகரில் நேற்று மாலை வதந்தி பரவியது.

இதனால் பாசையூர், ஈச்சமோட்டை, குருநகர்ப் பகுதி மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டனர்.

இதேவேளை கௌதாரிமுனையில கடற்றொழில் செய்துவிட்டு யாழ்ப்பாணம் வந்த கடற்றொழிலாளர்கள் அங்கு இராணுவம் இறக்கப்படவில்லை என்றும், தள்ளாடி இராணுவ முகாமில் ஹெலிகள் அடிக்கடி இறங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது என்றும் கூறினார்கள். (வ)

## பரவலாக ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் பரவலாக ஹெலிகொப்டரிலிருந்து ஹலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் வாழும் குடியிருப்புகளையும், பிரதான வீதிகளையும் நோக்கியே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாயினும்சேதம் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை

நீண்ட நாட்களின் பின் நடைபெற்ற இத்தாக்குதலினால் மக்கள் பெரும் பதற்றத்திற்குள்ளாகிறார்கள். (க)

## வடக்கே பசளை, எரிபொருள் எடுத்து வர இராணுவம் தடை

(மாங்குளம்)

வவுனியாவிலிருந்து வட பகுதி நோக்கி பசளை, எரிபொருள் கொண்டுவர இராணுவம் தடைவிதிக்கிறது.

விவசாயத் தேவைக்காக பயன்படுத்தும் யூறியா, டீசல் போன்றவற்றை வடபகுதிக்கு எடுத்துவர இராணுவம் அனுமதி மறுக்கிறது.

இதேவேளையில் விவசாயிகள் பீ-1 பசளை, மண்ணெண்ணை போன்றவற்றை எடுத்துவருகின்றனர். அத்தியாவசிய பசளைகளை கொண்டுவர அனுமதியில்லாததால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (150)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் பிரசவ வார்ட் திறப்பதற்கு பூர்வாங்க ஏற்பாடுகள்

(நாவற்குழி)

கைதடிஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் அடுத்த மாத முதல்வாரத்தில் பிரசவ வார்ட் திறக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்கொழுது நடைபெற்றுவருகிறது.

தமிழர் பிரதேசத்தில் ஒரேயொரு ஆயுள்வேத போதனா வைத்தியசாலையாக விளங்கும் இவ்வைத்தியசாலை தற்பொழுது பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறது.

இவ்வைத்தியசாலையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நலன்புரிச்சங்கத்தின் உதவியுடன் பல அபிவிருத் திட்டங்கள் தற்பொழுதுமேற் கொள்ளப்பட்டுவருகிறது.

பற்றைகளும் முட்புதர்களும் நிறைந்து கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இவ்வைத்திய சாலை வளவு நலன்புரிச்சங்கத் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து வார்ட்டுகளை உள்ளடக்கிய இவ்வைத்தியசாலை தற்பொழுது 3 வார்ட்டுகள் மட்டுமே இயங்கின்றன.

முறிவு, நோவு, குழந்தைப் பிள்ளை வைத்தியம், சர்ம ரோகம், விஷகடி, பிரசவம் ஆகியவற்றிற்கு இங்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

விஷகடி வைத்தியம் டாக் சிற்றம்பலத்தின் உதவியுடன் இங்கு மேற்கொள்ளப்பட விருப்பதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ம. தவத்துரை தெரிவித்தார்.

சனி, ஞாயிறு முழு நாட்களும் வெளிநோளர்பகுதிஇயங்குவதற்கு வைத்திய ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஆயுள்வேத திணைக்களம் தூர இருக்கின்ற காரணத்தினால் இவ்வைத்திய சாலை அபிவிருத்தி சம்பந்தமாக உடனுக்குடன்தொடர்பு கொண்டு பணம் பெறமுடியாதிருப்பதால் அபிவிருத்திவேலைகள் மேற்கொள்ளமுடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நான்கு வைத்தியர்கள் இங்கு 'கடமையாற்றுகிறார்கள். 29 தொண்டர்கள் சேவைநோக்குடன் சம்பளமற்ற முறையில் இங்கு கடமையாற்றிவருகிறார்கள்.

இவர்களின் கைவண்ணத்திலே வைத்தியசாலை புதுப் பொலிவுபெற்று வருகிறதுஎன்றும் அவர் கூறினார்.

மூலிகைகளிலிருந்து மாத்திரைகள் தயாரிக்கும் பணிகள் தற்பொழுது இங்கு நடைபெற்றுவருகிறது என்று யாழ். பல்கலைக்கழகத்தைச் சித்த மருத்துவத்துறை தலைவரி டாக்டர் எஸ். பவானி தெரிவித்தார்.

மின்சாரமின்மையால் நாற்பது கிலோதான் தற்பொழுது அரைக்கமுடிகிறது. என்றும் மின்சாரம் ஒழுங்காக கிடைக்கும்பட்சத்தில் மாத்திரைகள் போன்ற மேலைத்தேய மருந்துகளுடன் போட்டிபோடக் கூடிய மருந்துகள் தயாரிக்க முடியும் என்றும் அவர் கூறினார். [107]

## இன்று சைவத் தொண்டர் நிலையகொடிதினம்

(கொழும்புத்துறை)

யாழ் திருநெல்வேலியில் அமைந்திருக்கும் சைவத் தொண்டர் நிலையத்தின் முதலாவது ஆண்டு கொடிதினம் இன்று 30ம்திகதி செவ்வாய்க்கிழமை காலை பத்துமணிக்கு நடைபெற உள்ளது.

நாட்டின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இம்முறை கொடித்தினத்தைநினைவுகூரும் முகமாகவும் தமிழீழ மண்மீட்புப் போராட்டத்தில் வீரமரணமடைந்த சகல போராளிகளின் ஆத்ம சாந்திக்காக அன்றைய தினம் காலை நிலையத்தின் தலைமை அலுவலகத்தில் அமைப்பாளர் சைவத் திரு. இ. சுவாமிநாதன் தலைமையில் பஜனை, கூட்டுப் பிராத்தனை, விசேட பூசையும் நடைபெறும்.

## இராசி பலன்

செவ்வாய்க்கிழமை

30 - 10 - 1990

ஏகாதசி மு. ப. 10-28வரை மரணயோகம், பூரட்டாதி பி. இ. 2-09 வரை இராகு காலம், மாலை 3-02 முதல் 4-32 வரை. நல்ல நேரம் 10-32 முதல் 12-30 வரை, உத்தன ஏகாதசி விரதம்.

மேடம்: மறைமுகஎதிர்ப்பு பணக் கஷ்டம், தொழில் போட்டி, மனமாற்றம்

இடபம்; தொழில் லாபம், குடும்பத்தில் குதூகலம், இனசன மகிழ்ச்சி, காரியவெற்றி.

மிதுனம்: கல்வியால் பாராட்டு, மன மகிழ்ச்சி, சகோதரர் பகை, குடும்பம்பிரிவு

கடகம்: ஏமாற்றம், தொழில் குறைவு, குடும்ப விரோதம், காரியபலிதம்.

சிங்கம்; அந்நியர் விரோதம் பயந்தசுபாவம், வயிற்றில் ரோகம், தாய்வழிமூலமான கவலை.

கன்னி: காரியவெற்றி, சொத்து சேரல், கடிதஉறவு, பணவரவு.

துலாம்: அந்நிய வாசம், கடன் வரவு, புதிய முயற்சி, அதிகாரிகள் பாராட்டு.

விருச்சிகம்: வீண் பகை, குடும்பத்தில் கவலை, மனைக் கஷ்டம், தவறிப்போனது கிடைக்கும்.

தனுசு; மனவேதனை, தொழில் பிணக்கு, பொருள் செலவு, தண்டனை.

மகரம்: புதிய முதலீடு, விவேகமற்ற செயல், குடும்ப மகிழ்ச்சி, அறிஞர் பாராட்டு.

கும்பம்: தடுமாற்றம், தவறான சிந்தனை, பொருள் கஷ்டம், குடும்ப மோதல்.

மீனம்; அந்நியர் உதவி, நண்பர் தொல்லை, தொழில் லாபம், அதிகாரிகள் பாராட்டு

ஜோஸ்யர்.

## படையினருக்கு உணவாகும் வீட்டு மிருகங்கள்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால் அப்பகுதிகளிலுள்ள ஆடு, மாடு, கோழி போன்றவைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டுவருகிறது.

இராணுவ கெடுபிடியால் அப்பகுதிகளை விட்டு வெளியேறியுள்ள பொதுமக்கள் விட்டுச்சென்றுள்ள வளர்ப்பு மிருகங்கள் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் சிக்குண்டு அந்த இடங்களியேலே இறந்து காணப்படுகின்றன.

அந்தோனியார் கோவில் பொன்னுச்சிகடை, இலங்கை வங்கி. தபாற்கந்தோர் பகுதி போன்ற இடங்களிலேயே பல ஆடு மாடு போன்றவைகள் அழுகிய நிலையில் கிடந்து துர்நாற்றம் எடுக்கிறது (101)

## அனுமதி பெறவேண்டும்

(கொழும்பு)

நாட்டில் கதிரியக்க, அணுவாயுத சாதனங்களைப் பயன்படுத்துபவர்கள் அணுவதிகார சபையிடம் அனுமதி பெறவேண்டும். இந்நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் கதிரியக்கத் தாக்கத்தால் பாதிப்படைவதாகக் கிடைக்கப்பெற்ற புகார்களை அடுத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## யாழ். தபாலகத்தில் ஜனசக்தி கருமபீடம்

(கொழும்புத்துறை)

யாழ் பிரதம தபால் கந்தோரில் கடந்த 24ம் திகதி முதல் மீண்டும் ஜனசக்தி பெறுபவர்களின் கருமபீடம் செயல்பட்டு வருகின்றது.

ஜனசக்திக் கரும அலுவலகத்தில் கடந்த 24ம் திகதியிலிருந்து ஜனசக்தி பெறுபவர்கள் அங்குதொடர்புகொண்டு கருமமாற்றுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

## தாவடியில் சுகாதார நிலையம்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தற்காலிகமாக தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 27ம் திகதி சனிக்கிழமை முதல் செயல்பட்டுவருகின்றது.

எனவே தெல்லிப்பழை சுகாதார வைத்தியப் பிரிவில் உள்ள சகல வெளிக்கள ஊழியர்களையும் தவறாது தாவடி ஆரம்ப சுகாதார பணிமனைக்குச் சமூகமளிக்குமாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## விதைகள் வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான சகலதர விதைத் தானியங்களை கிளிநொச்சி விவசாயப் பண்ணையில் இருந்து பெற்றுத் கொடுப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. தா. குணரத்தினம்மேற் கொண்டு வருகின்றார்.

## கொழும்பு — முகாம்களிலுள்ள தமிழர் தொற்று நோயால் பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் தொற்றுநோய் பரவிவருவதால் முகாம்களிலுள்ள தமிழர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்துவருகிறார்கள்.

சின்னம்மை. குக்கல், சின்னமுத்து, தொண்டைக்கரப்பான் போன்ற நோய்களினால் இங்குள்ள பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள மூன்று முகாம்களிலும் நிலவும் சுகாதார வசதியின்மையினாலேயே தொற்றுநோய் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## ★ ராமர் ஜன்ம பூமி - பாபரி மசூதி

# மதவெறியின் கோரப் பிடியிலிருந்து

# நாட்டைக் காப்பாற வி.பி.சிங் முயற்சி

## சர்ச்சையைக் கிளறும் சந்தர்ப்பவாதக் கட்சிகள்

'ராமர் ஜென்ம பூமி பாபரி மசூதி' இன்று இந்தியாவை ஆட்டிப்படைத்து ஓர் அரசையே கவிழ்க்கச் செய்யும் அளவுக்கு பூதாகரமாகி விட்ட பிரச்னை இங்கு நடப்பது இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான கலவரமோ பிரச்னையோ அல்ல, மத வெறிபிடித்த ஓர் அமைப்பிற்கு ஒரு கட்சி வழங்கிய ஆதரவால் ஏற்பட்ட குழப்பமேயாகும்.

ராமர் பிறந்த போதோ, ராமர் மறைந்த பின்போ எழாத ஓர் சர்ச்சை அந்த 'ராமாயணம்' முடிந்து பல கோடி வருடங்களின் பின் அவரது கொள்கைகளை பின்பற்றுவதாக கூறும் ஓர் மத வெறிக் குழுவால் தோன்றியுள்ளது.

இந்த சர்ச்சை என்றோ தவிர்க்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு நீருற்றி வளர்த்து இன்று நாட்டை அழிக்கும் நிலைக்கு தள்ளியதில் அரசியல் வாதிகளுக்கே முக்கிய பங்குண்டு. மதத்தின் பெயரால் வன்முறை நிகழ்வதை எந்த மதமும் அனுமதிக்காது. அதனை பின்பற்றுபவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.

18ம்நூற்றுண்டின் தொடக்கத்தில் அயோத்தியில் முஸ்லீம் மசூதி ஒன்று கட்டப்பட்டது. அந்த நாள் தொட்டே இந்த சர்ச்சை வளரத் தொடங்கியது. காலத்துக்கு காலம் இருந்தவர்கள் இதனை தமது இஸ்டப்படி கையாண்டு வந்ததால் பிரச்னை தீர்வின்றி நீடிக்கத் தொடங்கியது.

ஆண்டவனை வணங்கி சட்டத்தையாண்ட நீதிமன்றங்களிலேயே ஆண்டவனின் ஆலய பிரச்னை புகுந்தது. அக்காலங்களிலிருந்த இன மத ஒற்றுமை முரண்பாடுகளுக்கமைய தீர்ப்புகளும் ஒன்றுக்கொன்று முரணாகவே அமைந்து வந்தது.

அயோத்தியில் இந்துக்களின் கை ஓங்கத்தொடங்கியதும் மசூதிக்கு அருகிலேயே ராமர் கோயிலை கட்டவேண்டுமென்று இந்துமத பூசாரிகள் விரும்பினர் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டபோது நீதிமன்றம் இதற்கு தடை விதித்தது. இதை தொடர்ந்து கோயில் கட்டவேண்டுமென்ற பிடிவாதப் போக்கால் அங்குமத உணர்வு தூண்டப்பட்டது. இதனால்இனஉணர்வில் பெரும் பாதிப்பு ஏற்படத்தொடங்கியது.

19ம் நூற்றுண்டு ஆரம்பத்தில் இந்து, முஸ்லிம் மதங்களிடையே, மதப்பெரியோர்கள் மேற்கொண்ட நல்லெண்ண முயற்சிகளினால் சுமார் 45 வருடங்கள் இது ஒரு பிரச்சினையாக அங்கு தெரியவில்லை. எனினும் மிக மெலிதாக மக்களிடையே ஒரு உணர்வலை உறுத்திக் கொண்டேயிருந்தது.

1949ல் இந்துக்கள் திடீரென மசூதிக்குள் புகுந்து அங்கு ராமர் சிலையை வைத்தார்கள். மீண்டும் இப்பிரனை பூதாகரமாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மசூதியையும் அதனைசுற்றியுள்ள குறிப்பிட்ட பகுதியையும் நீதிமன்றம் உடனடியாக தடைசெய்தது. மசூதியும் பூட்டப்பட்டது.

1950ம் ஆண்டு சர்ச்சைக்குள்ளான இடத்தை அரசு சுவீகரித்ததுடன் மசூதியை திறந்து இராமர் சிலைவைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட இடம் வரை சென்று பூசை செய்ய இந்துக்களுக்கு அனுமதியும் வழங்கியது. இதையடுத்து முஸ்லிம்கள் மத்தி

**ரி. சிவகணேசன்**

யில் பெரும் எதிர்ப்புணர்வு ஏற்பட 1961ல் அவர்கள் நீதிமன்றத்தில் மசூதியையும் அதைசுற்றியுள்ள பகுதியையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனவழக்கு தாக்கல் செய்தனர்.

இடையிடையே மதப்பெரியவர்களின் விடாமுயற்சியால் சமாதான பேச்சுக்களும் இருதரப்பினரிடையேயும் நடைபெற்றன. எனினும் எந்த வொரு முடிவுமில்லாது பேச்சுக்கள் முடிவடைந்தன. இதற்கிடையில் 1984ல் முஸ்லிம்கள் கேட்ட இந்த நிலப் பகுதியை மீட்டெடுக்கப் போவதாக அறிவித்த 'விஸ்வஹிந்து பரிஷத்தும், 'இராம ஜன்மபூமியும் அதற்கென 'விடுதலை வேள்விக்குழுவொன்றையும் அமைத்து உடனடியாக செயற்படவும் தொடங்கியது.

1989ல் பிரச்னை பூதாகரமாகியது. பிரதமர் திரு. ராஜீவின் ஆட்சியில் தீவிர வலதுசாரி இந்துக்கட்சியான பாரதிய ஜனதா கட்சி, விஸ்வஹிந்துப்பரிசத்துடன் இணைந்து மசூதியை இடித்துவிட்டு இராமர் கோயிலை கட்டப்போவதாக அறிவித்தது. ஆனால் அதற்கு அரசு அனுமதிக்கவில்லை.

மசூதியை இடிக்காமல் கோயிலை கட்ட அரசு அனுமதி வழங்கியது. பொதுத் தேர்தல் நடைபெறவிருந்ததால்திரு. ராஜீவ் இப்பிரச்னையால் ஓர் சிக்கல் எழுந்து தமது எதிர்காலத்தை கேள்விக் குறியாக்க விரும்பவில்லை. ஆனால்பாரதிய ஜனதா கட்சி மசூதி கோயில் விவகாரத்தை பெரிதுபடுத்தி இந்துக்களுக்கும்- முஸ்லிம்களுக்குமிடையில் பெரும்பிரச்னையே தோன்றுமளவிற்கு சம்பவங்களை உருவாக்கியது.

1989 நவம்பர் 9ம் திகதி ஆயிரக்கணக்கான மதவாதிகளுடன் விஸ்வஹிந்து பரிஷத் இராமர் கோயிலிற்கு அத்திவாரமிட்டது. தமது மத உணர்வை திரு. ராஜீவ்காந்தி பாதித்துவிட்டதாக முஸ்லிம்கள் மிகுந்த ஆத்திரமுற்றனர். இதனால் தேர்தலில் திரு. காந்திக்கு முஸ்லிம்களின் வாக்கு எதுவுமே கிடைக்காது போயிற்று. வடக்கே படு தோல்வியுமடைந்தார்

இந்து மதவெறிக்கட்சியான பாரதீய ஜனதா கட்சி, திரு. வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணியுடன் கூட்டணி சேர்ந்து தேர்தலில் அமோக வெற்றிபெற்றது முஸ்லிம்களை புறக்கணித்ததால் ராஜீவ் காந்தி ஒரு விதத்தில் தோல்வியுற்றார். இந்துக்களை தூண்டியதால் பாரதிய ஜனதாகட்சி அமோக வெற்றி பெற்றது. வடக்கே முஸ்லிம்களின் வாக்கு திரு. வி. பி. சிங்கிற்கே பதிவானது.

ஒருபுறம் ஆத்திரமுற்ற முஸ்லிம்களின் முழு வாக்குகளையும் பெற்று வெற்றிபெற்ற திரு. சிங், மறுபுறம் முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களை தூண்டி இந்துக்களின் வாக்குகளை பெற்ற பி. ஜே. பி. இரண்டும் கூட்டிணைந்தன. ராஜீவை அகற்றவே இக்கூட்டிணைப்பென எல்லோர்க்கும் தெளிவாகியது.

அரசியலில் மதம் கலந்தால் ஆபத்து மதத்துக்கல்ல அரசுக்கே ஏற்படும் என்பதை பாரதிய ஜனதாவுடன் சேரும் போதே திரு. சிங் புரிந்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் அப்போது அவருக்கு அதுபுரியவில்லை. சிறுபான்மை அரசுக்கு ஆதரவளித்த பாரதிய ஜனதா இவ்விவகாரத்தில் பிரதமர் திரு. சிங்கை மிரட்டத்தொடங்கியது.

மசூதியை இடித்து கோயிலை கட்டவும் முனைந்தது. இதற்கு சிங் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. மற்றொரு கூட்டணியான இடதுகம்யூனிஸ்டுகளும் பாரதிய ஜனதாவின் முயற்சியை வன்மையாக எதிர்த்தனர்.

மதத்தை ஒதுக்கி மனிதனை சம உரிமையுடன் நோக்கும் கம்யூனிஸ் இடதுபுறம். மதமே அரசு, மதமே உயிர்நாடி என போற்றும் பாரதீய ஜனதா வலது புறம். எதிரும் புதிருமான இருகட்சிகளை இரண்டு கைகளிலும் பிடித்து தமது பயணத்தை தொடரலாமென்றால் உட்கட்சியிலோ பதவிப் போட்டி. ஒருவாறு சரிக்கட்டி, சமாளித்துக்கொண்டு திரு. சிங் ஆட்சியை கொண்டுசென்றார்.

ஆனால் பாரதிய ஜனதா இராமர் ஜன்மபூமி - பாபரி மசூதி பிரச்சனையை விடுவதாக இல்லை. விவகாரத்தை சமாளிக்க சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டது. தனித்தனியாக ஆலோசிக்கப்பட்டது. நீதிமன்றிலும் விசாரணைக்கு வந்தது. எனினும் எந்தமுயற்சிக்கும் பாரதீய ஜனதா இணங்கவில்லை.

மசூதியை இடிப்பது, கோயிலை கட்டுவது என்ற முடிவில் மாற்றமில்லையென்றது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும்நடந்தது. இராமர் சிலையொன்றை ஊர்தியில் வைத்து ரதபவனி ஒன்றையும் கட்சியின் தலைவர் திரு. எல். கே. அத்வானி ஆரம்பித்தார். ரதபவனி தடுக்கப்பட்டு கோயில் கட்டுமாணப் பணி தடைப்படுமானால் 'தேசிய முன்னணிக்கான தமது ஆதரவை வாபஸ்பெறப்போவதாகவும் கட்சி திரு. சிங்கை எச்சரித்தது.

ரதபவனியும்ஆரம்பமானது எத்தனையோ கட்சித்தலைவர்கள், மதபெரியார்களும் அரசும் எவ்வளவோ எடுத்துரைத்தனர். ரதபவனியோ தொடர்ந்தது. பவனி அயோத்தியை அண்மித்தபோது திரு. அத்வானி ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் கைதானார்.

பி. ஜே. பி. யின் மிரட்டல்கள், எச்சரிக்கைகள் பலனளிக்கவில்லை, அத்வானியை விடுதலை செய்ய அரசு மறுத்தது. கட்சியின் மேலிடம் கூடியது. அரசுக்கான ஆதரவை வாபஸ் பெறுவதாகவும் முடிவு செய்தது.

பதினொருமாத காலம் திக்குமுக்காடிவந்த தேசிய முன்னணி' அரசுக்கு முற்றுப் புள்ளிவைக்க முடிவான பிரதமர் திரு. சிங்கை பதவி விலகுமாறும், ஆட்சியை கலைக்குமாறு சிங்குக்கும் ஜனதிபதி வெங்கட்ராமனுக்கும் வேண்டுகோள்கள் பறந்தன. முடிவு இன்னும் சில தினங்களில் தெரியும்.

அத்வானியின் 'ரதயாத்திரையை தடுக்காது இன்று கோயில் கட்டுமாணப்பணியை தொடங்க சிங் அனுமதித்திருந்தால் அவரது ஆட்சி எந்தவித பாதிப்புமின்றி தொடர்ந்திருக்கும். ஆனால் நாட்டைக்காப்பதா, ஆட்சியை காப்பதா என்ற நிலையில் அவர் துணிந்து எடுத்த முடிவு பாராட்டத்தக்கது.

மதசார்பின்மைகொள்கைக்காக துப்பாக்கி குண்டைத் தாங்கி மகாத்மா காந்தி பலியான போது நாடு அழுதது. காந்தி பிரிந்தாலும் அவரது காந்தீயக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டுவந்தது.

அந்த கொள்கை என்றும் தொடருமென நிரூபித்து இந்தியாவின் ஒற்றுமைக்காக திரு. சிங் எடுத்த முடிவு அவரது நேர்மைக்கும், சிறந்த ஆட்சிக்கும், துணிச்சலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்

இந்த நிலையில் அவரை நீக்கி மற்றொருவரை கட்சிக்குள் பிரதமராக்கவும், அமைச்சரவையிலிருந்து விலகி அவரையே பதவி விலக கோரும் திரு. மேனகா காந்தியையும், இப்பிரச்னையை சாதகமாக்கிக்கொள்ள முனையும் இந்திராகா கிரசையும் நினைக்கும் போது பிரதமர் திரு. சிங் எவ்வளவோ மேலானவர் என்பது தெரிகிறது.

# அரசுடன் இரகசிய உடன்பாடு

# பாரதீய ஜனதா மறுப்பு

## பொய்ப் பிரசாரத்திற்கு கண்டனம்

(புதுடில்லி)

ராமர்ஜன்ம பூமி பாபரி மசூதி பிரச்னை தொடர்பாக தேசிய முன்னணி அரசுக்கும் பாரதீய ஜனதா கட்சிக்குமிடையில் உடன்பாடொன்று காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை பாரதீய ஜனதா வன்மையாக மறுத்துள்ளது.

தமது கட்சிக்கு எதிராக மக்களை திசை திரும்பவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள தவறான பிரச்சாரமெனவும் முக்கிய தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேசிய முன்னணி அரசு பதவி விலகி அரசை கலைத்து புதிய தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்றும் திரு. வி. பி. சிங்கிற்கு எதிராகவே பி. ஜே. பி. நவம்பர் 7ம் திகதி வாக்களிக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

இதற்கிடையில் ராமர் ஜென்மபூமி பாபரி மசூதி சர்ச்சையை வைத்தே தேசிய முன்னணியிலும், ஜனதா கட்சிக்குள்ளும் உட்கட்சிமோதலை உருவாக்க சில கட்சிகள் முயன்று வருவதாகவும் சம்பந்தப்பட்ட கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## கோயில் - மசூதி சர்ச்சை

# மதக்கலவரம் தோன்றலாம்

# 85,000 இந்துக்கள் கைது!

## இராணுவம் தயார் நிலையில்

(புதுடில்லி)

இந்தியாவில் ராமர் ஜென்ம பூமி-பாபரி மசூதி பிரச்னையால் மதக்கலவரம் தோன்றும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளதையடுத்து வடக்கே சுமார் 85,000 இந்துக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரதீய ஜனதா கட்சி உபதலைவர் திருமதி விஜயராய சிந்தியா உட்பட முக்கிய தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து கட்சி உறுப்பினர் ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று 30ம் திகதி மசூதிக்கு முன்பாக ராமர் கோயில் கட்டுமாணப்பணியை ஆரம்பிக்கப்போவதாகவும், மசூதியை இடிக்கப் போவதாகவும் கடும் எச்சரிக்கை விடுத்துள்ள பாரதீய ஜனதா அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதை தடுத்து மதக்கலவரம் ஒன்றை தடுக்க திரு. வி. பி. சிங் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார், அயோத்தியில் எந்த நிலையையும் சமாளிக்கும் விதத்தில் 50,000 இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் நாட்டின் ஒற்றுமையை காத்து மதக்கலவரத்தைத் தூண்டவேண்டாமென பி. ஜே. பிக்கும், விஸ்வஹிந்து பரிசத்துக்கும் பல தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனினும் தமது தொண்டர்கள் கட்டுமாணப் பணியை ஆரம்பிப்பார்களென பி. ஜே. பி. மீண்டும் அறிவித்துள்ளது.

மேலும் வடக்கே பல மாநிலங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு கலவரத்தில் ஈடுபடுபவர்களை கண்டதும் சுடவும் இராணுவத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (சி)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(கொழும்பு)

இலங்கை நிர்வாகசேவைப் பகுதிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1989ம்ஆண்டு மேற்படி பரீட்சை நடைபெறவிருந்ததாயினும் திட்டமிட்டபடி இப்பரீட்சையை நடாத்தமுடியாமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

காங்கேசன்துறையில்

# புலிகளின் மிதிவெடியில் சிக்கி படையினர் பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கி பல சிங்கள இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை சுற்றுடல்களில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடந்த சில நாட்களாக சண்டைகள் நடைபெற்றுவருகின்றது.

இச் சண்டைகளின்போது பல தடவைகள் இராணுவம் முன்னேற முயன்றபோதும் புலிகளின் மிதிவெடியினுல் அம் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்த படையினர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் தற்பொழுது சிகிச்சை பெற்று வருகிறுர்கள்.

## மேலும் இருவர் காயம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் கல்யாண மண்டபத்திற்கு மேல் வீசப்பட்ட பொம்மர் குண்டு வெடித்தபோது வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த துரைசிங்கம் நாகேஸ்வரன் (வயது 56) வீரபத்திரர் சிவசோதிநாதன் (வயது 40) ஆகியோர் காயமடைந்தனர். (159)

## யாழ். ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

தற்போது மானிப்பாயில் செயற்பட்டுவரும் யாழ். அரசினர் வைத்தியசாலையில் பிறந்த சகலகுழந்தைகளின் பிறப்புப் பதிவுகளையும் இங்கு நேரில் சென்று பதிவுசெய்யலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்து இரு கிழமைகளில் இலவசமாக வழங்கப்படும் பிரதியை இங்கு நேரில் சென்று பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## இராமர் கோயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லக்னேவில் இவ்வன்செயல்களில் பொலிஸார், நீதிபதி உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களைக் கலைப்பதற்கு பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதில் பலர் காயமடைந்துள்ளதுடன் அங்கு நிகழ்ந்த வன்செயல்களில ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் கத்திக்குத்துக்கும் உட்பட்டுள்ளனர். இப்பகுதிக்கு இராணுவம்அழைக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பில், இந்துமத பக்தச ஒருவர் இப்பிரச்சனையை முன்னிட்டு நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளார்.

குஜராத் நகரில் பல வெடிகுண்டுச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. 6 வடமாநிலங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அயோத்தி நோக்கிச் செல்லும் ரயில் போக்கு வரத்துக்கு இரண்டுநாள் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் அயோத்தி நகருக்கு ஊர்வலமாக செல்வதில் அடம்பிடித்து நிற்கும் இந்துமத பக்தர்களை தடைசெய்யும் உத்தரவை நீக்க கோரி, அலகபாத் உயர்நீதி மன்றத்துக்கு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கப்பலில் வந்த

# உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்படுகிறது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகில் இருந்த உணவுத் திணைக்கள களஞ்சியம் 55 ஆயிரம் ரூபாசெலவில் புனரமைப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டுவரப்பட்ட நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தற்போது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

உணவுத்திணைக்களம், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் மேற்பார்வையிலும் பாதுகாப்பிலும் இருந்துவரும் இக் களஞ்சியத்திலிருந்து தமக்குரிய உலர் உணவுப்பொருட்களை சம்பந்தப்பட்ட தொண்டர் ஸ்தாபனங்கள் தற்போது பெற்று வருகின்றன (61)

# கிளிநொச்சியில் கோழித்தீன் உற்பத்தி தொழிற்சாலை

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கோழித்தீன் உற்பத்தித் தொழிற்சாலையும், கோழிப் பண்ணையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது

கிளிநொச்சி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் இதற்கான நிதியை வழங்கியுள்ளது.

இதன் அங்குரார்ப்பண வைபவம், கிளிநொச்சி கொத்தணி அதிபர் என். சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி, அபிவிருத்திப் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் எஸ்.சிவராசலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இத்தொழிற்சாலையும் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும், (83)

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் நவம்பர் 5-ம் திகதி ஆரம்பிக்கவிருப்பதால் சகல தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், செய்முறைக்காட்டுநர்கள் யாவரையும் நவம்பர் 1-ம் திகதி கடமைக்குச் சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விஞ்ஞானபீட தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், செய்முறைக் காட்டுநர்கள் ஆகியோருக்கும் ஜூன் 28, ஜூலை 2-ந் திகதிகளில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் நியமனம் பெற்றுள்ள கலைப்பீட தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், கட்டுரை ஆசிரியர்கள், தற்காலிக செய்முறைக்காட்டுநர்கள் ஆகியோருக்கு உரிய நியமனக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

ஆகவே மேற்படி நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்கள் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனத்திடமிருந்து பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாமென்று யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (153)

## 16 பேர் சுட்டுக்கொலை

(ஜொகனஸ்பேர்க்)

தென்னுபிரிக்காவில் நேற்று இடம்பெற்ற வன்செயல்களின்போது 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சிலமாதாங்களில் மட்டும் தென்னுபிரிக்க இராணுவத்தினரால் 800 பேர் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## மாவீரர்தினம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். (101)

## இனப் பிரச்னைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாலைதீவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' உச்சி மாநாட்டில் இலங்கை ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசா கலந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து 'சார்க்' மாநாடு நடைபெறுது போகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்காசிய பிராந்தியத்திலுள்ள ஏழு நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ளும் இம் மாநாடு அடுத்த மாத நடுப்பகுதியில் மாலைதீவு தலைநகர் 'மாலே'யில் நடைபெறவுள்ளதாக ஏற்கனவே ஏற்பாடாகியிருந்தது.

இம்மாநாட்டில் ஏழு நாட்டு தலைவர்களும் கலந்து கொள்வதாக இருந்த போதிலும் இலங்கை ஜனுதிபதி திரு. பிரேமதாசா கலந்து கொள்ள மாட்டாரென திடீரென அறிவிக்கப்பட்டு அதற்கான கடிதமும் மாலைதீவு அரசுக்கு தூதர் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணத்தை அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து 'சார்க்' மாநாட்டு குழுவில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்ளாத பட்சத்தில் இம் மாநாடு நடைபெறமாட்டாதெனவும் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

இந்தியா இம்மாநாட்டில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பெரும் நெருக்கடியை கொடுக்கலாமென இலங்கை எதிர்பார்த்திருக்கலாமெனவும் இந்திய வெளியுறவு அமைச்சரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 'சார்க்' நாடுகளின் கொள்கைக்கு முரணுக இலங்கையின் உள்விவகாரத்தில் அயல்நாடொன்று தலையிடுவதை ஆட்சேபித்தே ஜனுதிபதி மாநாட்டை புறக்கணிப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன, (சி)

யாழ். செயலக ஊழியருக்கு

# சம்பளம் வழங்குவதற்கு பணமில்லை என்று கைவிரிப்பு

(மானிப்பாய்)

யாழ். செயலக ஊழியர்களின் அக்டோபர் மாத சம்பளம் வழங்குவதற்கு பணம் இல்லையென்று கைவிரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணம் கொழும்பிலிருந்து வந்து சேரவில்லையாம் அத்துடன் கடந்த செப்ரெம்பர் மாத பணமும் ஊழியர்களுக்கு முழுமையாக வழங்கப்படாமல் 1000 ரூபா முற்பணம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லைத்தீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகள் இடைமறித்து தாக்கியதில் பலர் படுகாயமடைந்தனர். ஒருவர் கொல்லப்பட்டார்.

புலிகளின் தாக்குதலால் முன்னேறமுடியாத இராணுவத்தினர் முகாமுக்குள் சென்று பொதுமக்கள் வாழும் பகுதியான சிலாவத்தையை நோக்கி கடும் ஷெல்தாக்குதல் மேற்கொண்டதில் 12க்குமேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. (வி)

## ஈழ அகதிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கவும், இருப்பிடங்கள் அமைத்துக்கொடுக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

இலங்கை அகதிகளுக்காக இதுவரை பதினெரு கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அமைச்சர் ஒருவர் கூறினுர்.

## குமுண [illegible]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை லங்காசிறி என்ற கப்பல் இன்னும் சில தினங்களில் அத்தியாவசியப் பொருட்களுடன் பருத்தித் துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (61)

## கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கப்பலில் கொழும்பு செல்லவருபவர்கள் 3 நாட்களுக்குப் போதுமான உணவும், குடிநீரும் கொண்டுவருதல் அவசியம். மருந்துமாத்திரைகள் உட்கொள்பவராயின் ஒரு கிழமைக்குப் போதுமான மருந்துகள் கைவசம் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றுர்கள்.

நோயாளிகளுடன் செல்பவர்கள் யாழ். நகரை விட்டு வெளியேறுவதற்கான அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் விபரம்:

எம். எஸ். யாசின் யாழ்ப்பாணம், எஸ். கசுபதிதேவி மாங்குளம், ஆர்.தேவரட்ணம் சாவகச்சேரி, ஹேமா குணரட்ணம் பரந்தன், சி. யோகநாதன் சுன்னுகம், திருமதி மென்சிஸ் மானிப்பாய், கே. கணபதிப்பிள்ளை கரவெட்டி, டாக்டர் வி. கிருஷ்ணராசா யாம்ப்பாணம், திருமதி சமலாம்பிகை மானிப்பாய், திருமதி நாகம்மா கோப்பாய், பி. மாணிக்கம் கோண்டாவில், திருமதி பேரின்பநாயகி புத்தூர், வ[illegible]சந்தி வல்வெட்டித்துறை, சு. பேந்திரலிங்கம் அல்வாய், திருமதி எஸ். சத்தியபாமா தெல்லிப்பளை. ரி. சிவதாசன் சுண்டுக்குளி, ஆர். பாலதாசன் மீசாலை, எஸ். ஆர். அரியராசா சுண்டுக்குளி, ஆர். அருமைமுத்து மருதனுமடம், எஸ். சிவசுப்பிரமணியம் கொக்குவில், எஸ். குமரகுரு சாவகச்சேரி, ஈ.ரோய் யாழ்ப்பாணம், எம். மகாலிங்கம் மானிப்பாய், ஞானரத்தினம் பஷையூர், பாக்கியவதி மீசாலை.

## மட்டுநகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெளியே வந்தபோது பல்கலைக்கழக சந்தியில் வைத்து விடுதலைப்புலிகள் 'ஹாகஸ்ரோ' தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தினர் வந்த வாகனங்கள் அனைத்தும் சேதமடைந்ததுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலைப் பற்றிய செய்தியறிந்து மொறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து இரு பவல் வாகனத்திலும், ஒரு றக் வண்டியிலும் உதவிக்கு வந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கியதில் இராணுவத்தினர் வந்த வண்டிகள் அனைத்தும் அழிக்கப்பட்டதுடன், பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்த இராணுவத்தினரை தூக்கிக்கொண்டு இராணுவத்தினர் பின்பு முகாமுக்குள் சென்றனர்.

காலை 9-35 மணி தொடக்கம் 9 45 வரை நடைபெற்ற இக் கடும் சண்டையில் விடுதலைப்புலிகள் தரப்பில் மேஜர் கண்ணன், பிரிந்தன் (செங்கலடி), சங்கர் (படுவாங்கரை) ஆகியோர் வீரமரணமடைந்னர்.

## மேஜர் கண்ணன்

மேஜர் கண்ணன், (செல்லையா உதயன்) 1984-ம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, சிங்கள இராணுவத்தினருக்கும், இந்திய படையினருக்கும், தமிழ் தேசிய இராணுவத்தினருக்கும் எதிராக பல தாக்குதல்களை தலைமை தாங்கி வெற்றி கண்டவர்.

அண்மையில் கல்முனை இராணுவமுகாமை தாக்கி அதனை முற்றுகதகர்த்து இராணுவத்கினர் அனைவரையும் கொன்று பெருமளவிலான ஆயுதங்களையும் கைப்பற்றிய வீரவேங்கையுமாவார். [வி]

## இழந்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிராமமட்டத்தில் அந்தந்தப் பகுதியிலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புகளை பாடசாலைகளிலும், கோயில்களிலும் சனசமூக நிலையங்களிலும், பொது மண்டபங்களிலும் இலவசமாக நடத்துவதற்கான நடவடிக்கைகள் யாழ், கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கத்தால் எடுக்கப்படவிருக்கிறது.

சேவைக்கால ஆலோசகர்கள் ஒவ்வொரு பாடநெறியிலும் தேர்ச்சி பெற்ற கல்வி அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ் இதற்கான பாடவிதானம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

பாடவிதானம் மறுசிரமைப்பு பாட ரீதியாகவும், வகுப்புக்கள் ரீதியாகவும் கைநூல்களாக வெளிவர இருக்கிறது. கற்பித்தல் வழிகாட்டியாக மேற்படி கைநூல்கள் அமைய உள்ளன.

சேவைக்கால ஆலோசகர்களுக்கான பாடவிதானத்தை மீள் ஒழுங்குகள் செய்வதற்கான விசேட கருத்தரங்கு, நேற்றுக் காலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரா. சுந்தரலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ([illegible])